பக்கங்கள் 22+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | தை 20 ஞாயிற்றுக்கிழமை 02.02.2025 | அதிர்வு 185



‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்









## பெருந்திரளானோரின் கண்ணீருக்கு மத்தியில்

# மாவையின் புகழுடல் இன்று தீயுடன் சங்கமம்

(எஸ்.நிதர்ஷன்)

தமிழினத்தின் விடுதலைக்காக அறவழியில் போராடி இறுதி வரைக்கும் ஓயாது குரல் கொடுத்த பெருந்தலைவர் - இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை.சோ.சேனாதிராஜாவின் புகழுடல் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் பெருந்திரளானோரின் கண்ணீருக்கு மத்தியில் தீயுடன் சங்கமானது.

யாழ். மாவிட்டபுரத்தில் உள்ள அன்னாரது இல்லத்தில் அஞ்சலிக்காக அவரது புகழுடல் வைக்கப்பட்டிருந்த நிலையில், இன்று காலை 8 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் எம்.பி. தலைமையில் அஞ்சலி உரைகள் ஆரம்பமாகின.

02 ▶

CLICK HERE VIDEO



# மாவையின் புகழுடல் இன்று தீயுடன் சங்கமம்








(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அஞ்சலி உரைகள் நிறைவுற்ற பின்னர் பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் புகழுடல் வீட்டில் இருந்து ஊர்வலமாக மாவிட்டபுரம் தச்சன் காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அங்கு பெருந்திரளானோரின் கண்ணீருக்கு மத்தியில் மாவை சேனாதிராஜாவின் புகழுடன் தீயுடன் சங்கமமானது.

இறுதி நிகழ்வில் அரசியல்வாதிகள், பொது அமைப்பினர், மத குருமார்கள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு மாவை சேனாதிராஜாவுக்குத் தங்கள் அஞ்சலிகளைச் செலுத்தினர்.

1942ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி பிறந்த மாவை. சோ. சேனாதிராஜா வீட்டில் தவறி வீழ்ந்த நிலையில் – யாழ். போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் – சிகிச்சைகள் பலனின்றி கடந்த 29ஆம் திகதி காலமானார்.




# தொலைத்தொடர்பு கோபுரத்தில் இருந்து கீழே வீழ்ந்து இளைஞர் ஒருவர் மரணம்!

## வவுனியாவில் சோகம்

(கி.வசந்தன்)

வவுனியா, மகாறம்பைக்குளத்தில் அமைந்துள்ள தொலைத்தொடர்பு கோபுரத்தில் இருந்து கீழே வீழ்ந்து ஒருவர் பலியாகியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, மகாறம்பைக்குளம் பகுதியில் அமைந்துள்ள தொலைத்தொடர்பு கோபுரத்தில் ஏறி இன்று திருத்தப் பணிகளை முன்னெடுத்து வந்த ஊழியர் ஒருவர் நிலைதடுமாறி கீழே வீழ்ந்துள்ளார்.

இதனால் படுகாயமடைந்த அவர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும், அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

சம்பவத்தில் அனுராதபுரம், நிக்கவரெட்டி பகுதியை சேர்ந்த 30 வயதுடைய சத்துரங்க ஹேரத் என்ற இளைஞரே பலியாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் தடவியல் பொலிஸாரின் உதவியுடன் வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழரசின் மூத்த தலைவர் மாவையின் இறுதி நிகழ்வு














# தமிழரசின் மூத்த தலைவர் மாவையின் இறுதி நிகழ்வு














# தமிழரசின் மூத்த தலைவர் மாவையின் இறுதி நிகழ்வு














# தமிழரசின் மூத்த தலைவர் மாவையின் இறுதி நிகழ்வு














# தமிழரசின் மூத்த தலைவர் மாவையின் இறுதி நிகழ்வு














# தமிழரசின் மூத்த தலைவர் மாவையின் இறுதி நிகழ்வு



















# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சமூகத்தைக் காப்போம்!

சமூகத்தைப் பெரிதும் பாதிக்கும் போதை வஸ்துப் பாவனை, புகைத்தல் பழக்கங்கள், பாலியல் தொற்று நோய்கள் உட்பட்ட சமூக சீரழிவுகள் மோசமடைந்து வருவது பற்றிய செய்திகள் அண்மைக்காலத்தில் தொடர்ச்சியாக வெளியாகி வருகின்றன.

நாட்டில் ஒருபுறம் ஊழல், மோசடி, லஞ்சம் போன்ற முறைகேடுகள், அழிவுச் செயற்பாடுகள் என்றால் மறுபுறம் உடலியல் மற்றும் சுகாதார ரீதியாகச் சமூகத்தை நாசமாக்கும் கெட்ட பழக்கங்கள் பரவி வருவது பற்றிய செய்திகள் தொடர்ந்து எச்சரிக்கை பண்ணும் விதத்தில் வெளியாகி வருகின்றன.

பெரும் சமூக நலிவுக்கான கால்கோள் ஸ்திரமாக இடப்படுகின்றதா என்ற அச்ச உணர்வுதான் ஏற்படுகின்றது.

நாட்டின் இளைஞர்களிடையே எச்.ஐ.வி. எனப்படும் எய்ட்ஸ் மற்றும் பாலியல் ரீதியாகப் பரவும் நோய்கள் அதிகரித்து வருவதான செய்தி இப்போது வெளியாகியிருக்கின்றது.

இந்த விடயத்தை கொழும்பு விஜேராமாவில் உள்ள இலங்கை மருத்துவ சங்க கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போது சமூக மருத்துவ நிபுணர்கள் சங்கத்தின் நிபுணர் வைத்தியர் விந்தியா குமாரப்பெல்லி தெரிவித்துள்ளார்.

15 முதல் 24 வயதுக்குட்பட்டவர்கள் இந்த விடயத்தில் அதிக ஆபத்தில் உள்ளனர் எனவும் இதனால் பாலியல் ரீதியாக பரவும் நோய்கள் மற்றும் பாதுகாப்பற்ற கர்ப்பங்கள் ஏற்படுகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், சமூக ஊடகங்களின் பயன்பாடு இதற்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்துள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

''இளைஞர், யுவதிகளே இச்சிக்கலில் அதிக ஆபத்தில் உள்ளனர். சமூக ஊடகங்களின் பயன்பாடு இதற்கு ஒரு பிரதான காரணமாகும். பல இளைஞர்கள் இந்தச் சமூக ஊடகங்கள் மூலம் கூட்டாளர்களை இலகுவாக கண்டுபிடிக்கின்றனர். இணைவு சுலபமாக்கப்பட்டுள்ளது.

''எல்லோரும் சமூக ஊடகங்களைப் பற்றி நினைப்பதில்லை, ஆனால் இளைஞர்கள் பல்வேறு உறவுகளை உருவாக்க சில டேட்டிங் பயன்பாடுகள் உள்ளன.

''அது மட்டுமல்லாமல், சிலர் மது மற்றும் போதைப்பொருள் பயன்பாட்டை நாடியுள்ளனர். இது போன்ற காரணங்களால், பாலியல் ரீதியாக பரவும் நோய்கள் மற்றும் எச்.ஐ.வி. போன்ற வைரஸ்கள் பரவல் வேகம் எடுத்துள்ளது.'' - என்கிறார் அவர்.

இளைஞர்கள் என்பதனால், அவர்கள் உடலில் பாலியல் ரீதியிலான ஓமோன்களின் சுரப்பு அதிகரிக்கின்றது. அதனால், உணர்வுகளும் சிலிர்த்துக் காணப்படும். அதை கட்டுப்படுத்திக் கொள்ள அவர்களுக்குத் தெரியாது. பெற்றோரும் இது குறித்துக் கதைப்பதில்லை. அதனைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் விதம் தொடர்பில் யாரும், அவர்களுக்குக் கூறுவதில்லை.

இந்தச் சூழ்நிலையில் சமூக ஊடகங்களின் படுகுழிப் பொறியில் அவர்கள் இலகுவாக விழுந்து விடுகின்றார்கள்.

இத்தகைய சமூக சீரழிவுகளுக்கெல்லாம் மூலம் - காரணம் - தேடிப் புறப்பட்டால் குற்றச்சாட்டு விரல் ஒரேயடியாக சமூக ஊடகங்களின் பக்கம் நீளுவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

சமூக ஊடகங்களும், ஸ்மார்ட் போன்களும் பல நல்ல - நன்மை பயக்கின்ற - காரியங்களுக்கு உதவுகின்ற அதே சமயம், அவை மறுபுறத்தில் சமூகச் சீர்கேடுகளுக்கும் பிரதான கருவிகளாக அமைவது இப்போது அவதானிக்கப்பட்டிருக்கின்றது.

இத்தகைய நெருக்கடியிலிருந்து நாட்டையும் இளைஞர் சமூகத்தையும் விடுவித்து மீட்டெடுக்கும் முயற்சி முன்னுரிமை கொடுத்து மேற்கொள்ளப்பட வேண்டும். விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கைகள் விரைந்து முன்னெடுக்கப்பட வேண்டும்.



# விற்பனைக்கு வைக்கப்பட்ட பழுதடைந்த பழங்கள் மீட்பு!

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை நகர் பகுதியின் பிரதான வீதியில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பழுதடைந்த ஒரு தொகை தோடம் பழங்கள் மற்றும் திராட்சைப் பழங்கள் கல்முனை பிராந்திய பொதுச் சுகாதார பரிசோதகர்களால் இனங்காணப்பட்டுள்ளன.

கல்முனை நகரில் பழுதடைந்த தோடம்பழங்கள் மற்றும் திராட்சைப் பழங்கள் விற்பனை செய்யப்படுகின்றன என்று கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை அடுத்து, குறித்த பகுதிக்கு திடீர் விஜயம் மேற்கொண்ட சுகாதார பரிசோதகர்கள் பழுதடைந்த பழங்களை மீட்டதுடன் வியாபாரிக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஒழுங்குகளையும் செய்துள்ளனர்.

இதன்போது கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் என்.ரமேஷ், பிராந்திய மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஐ.எல்.எம். லாபீர், கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் உள்ளிட்ட பொதுச் சுகாதார பரிசோதகர்களும் கலந்து கொண்டனர்.



# சாய்ந்தமருது சமூக அபிவிருத்தி அமைப்பின் ஆண்டு நிறைவும் கற்றல் உபகரணம் வழங்கலும்!



(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிரதேச சமூக அபிவிருத்தி அமைப்பின் இரண்டாவது ஆண்டு நிறைவும் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் அமைப்பின் தலைவர் ஐ. ஜாபீர் தலைமையில் சாய்ந்தமருது ரியாலுல் ஜன்னா வித்தியாலய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வுக்கு பொலன்னறுவை மாவட்ட சிரேஷ்ட நீர்ப்பாசன பொறியியலாளர் எம்.எஸ்.எம். நவாஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

கௌரவ அதிதிகளாக இன்ஜினியரிங் கன்சல்டன்சின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எம்.யூ.எஸ். நியாஸ் மற்றும் வரவ்ன் வூட் ரெசிடன்ஸ் உரிமையாளர் எம்.எச். முகம்மட் நாசர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வுக்கு விசேட அதிதிகளாக கேபிடல் எவ்.எம். சிரேஷ்ட முகாமையாளர் ஏ.எல்.ஜாபீர், பிறை வானொலியைச் சேர்ந்த ஏ.ஆர்.எம். நௌபீல் மற்றும் ஏ.ஜி. இக்பால் மற்றும்



சாய்ந்தமருது சமூக சேவை உத்தியோகத்தர் ஏ.ஆர். ரேஷ்மி மற்றும் எம்.யூ.எஸ். நிஜாம் ஆகியோர் பங்குபற்றினர்.

நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.






# 08 அடி உயரமான 9 தள திருக்கோவில் ஆலயத்தின் இராஜகோபுர திருப்பணி வேலைகள் மீண்டும் ஆரம்பம்!

(வி.ரி. சகாதேவராஜா)

கிழக்கிலங்கையின் வரலாற்று பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலயுத சுவாமி ஆலயத்தில் பல வருடங்களாக தடைபட்டிருந்த இராஜ கோபுர அமைப்பு திருப்பணி வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பண்டைய காலத்தில் இராஜராஜ சோழனால் இந்த ஆலயம் அமைக்கப்பட்டது என்று கூறப்படுகிறது.

முன்னொரு காலத்தில் "கந்தபாணத்துறை" என அழைக்கப்பட்ட திருக்கோவில் சங்ககாலம் மருவிய பின்பு திருக்கோவில் என அழைக்கப்பட்டது.

ஆலயத்தின் மூலப்பொருளான 108 அடி உயரமான 9 தளங்களுடன் கூடிய இராஜகோபுரம் அடித்தளம் இட்டு இதுவரை காலமும் முற்றுப் பெறாத நிலையில் 33 அடி உயரத்தில் காணப்படுகின்றது.

அதனை நிவர்த்தி செய்யும் முகமாக அடுத்த கட்ட திருப்பணியை ஆலய தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ் தலைமையிலான பரிபாலன சபையினர் கூட்டம் கூடி அடுத்த கட்ட நகர்வை முன்னெடுத்துள்ளனர்.



அதன் முதல் கட்டமாக நாடறிந்த சமூக செயற்பாட்டாளர் பரோபகாரி முன்னாள் கல்முனை லயன்ஸ் கழகத் தலைவர் பொறியியலாளர் சுந்தரலிங்கம் சசிகுமார் முதலிரு தளங்களை அமைக்க முன்வந்துள்ளார்.

ஆரம்ப வேலைகளுக்கான கிரியைகளை ஆலய குரு சிவஸ்ரீ அங்குசநாதக் குருக்கள் நடத்தினார்.

தொடர்ந்து ஆலயத் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ் மற்றும் வண்ணக்கர் வ.ஜெயந்தன் உள்ளிட்ட பரிபாலன சபையினர் கூடி திருப்பணி வேலைகளை ஆரம்பித்தனர்.

முதற் கட்டமாக மனமுவந்து இரு தளங்களை அமைக்க முன்வந்த திருக்கோவிலைச் சேர்ந்த சமூக செயற்பாட்டாளர் பொறியியலாளர் சுந்தரலிங்கம் சசிகுமார், ஆலய குருவால் காளாஞ்சி வழங்கி, பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இதில் ஆலய நிர்வாகத்தினர், வட்டார பிரதிநிதிகள், ஊர்ப் பெரியோர்கள் கலந்து கொண்டனர்.







# கல்முனை சுகாதார சேவைகள் பணிமனைக்கு ஆதம்பாவா எம்.பி.

(றியாஸ் ஆதம்)

அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களுக்கான அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.ஆதம்பாவா கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது கல்முனை பிராந்திய வைத்தியசாலைகளின் அபிவிருத்தி மற்றும் சுகாதார மேம்பாடு தொடர்பில் அவர், பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிருடன் கலந்துரையாடினார். அதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர், பிராந்திய பணிமனையின் சில பிரிவுகளுக்கும் சென்று பார்வையிட்டு, உத்தியோகத்தர்களையும் சந்தித்து கலந்துரையாடினார்.







# சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் ஞானச்சுடர் ஆன்மீக சஞ்சிகையின் 325 ஆவது மலர் வெளியீடு

## 3 லட்சத்து 76 ஆயிரம் ரூபா பெறுமதியான உதவித் திட்டமும் வழங்கல்

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், வெளியிடப் பட்டுவரும் ஞானச்சுடர் ஆன்மீக சஞ்சிகையின் தை மாத 325 ஆவது மலர் வெளியீட்டுவிழா ஆச்சிரம முதல்வர் அமுதகலாசுரபி கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை ஆசிரியரும், சைவப்புலவருமான சு.தேவமனோகரனும் மதிப்பீட்டு உரையை ஓய்வு நிலை அதிபர் ஆ. சிவநாதனும் ஆற்றினர்.

அதனைத் தொடர்ந்து சிறப்பு பிரதிகளும் வழங்கப்பட்டன.

ஆச்சிரமத்தின் உதவித் திட்டங்களாக, ஒரு லட்சத்து 45 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான் 3 சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

அச்சுவேலி பகுதியை சேர்ந்த ஆவரங்கால் நடராஜா மகா வித்தியாலயத்தில் தரம் - 11 இல் கல்வி கற்கும் மாணவன், வட்டுக்கோட்டை, அராலி மத்தி பிரதேசத்தை சேர்ந்த, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் தரம் - 12 இல் கல்வி கற்கும் மாணவன், கரவெட்டி, மத்தனி பிரதேசத்தை சேர்ந்த, கரவெட்டி சரஸ்வதி வித்தியாலயம் தரம் - 06 இல் கல்வி கற்கும் மாணவன் ஆகியோருக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன

மூத்த பிரஜைகள் குழு முதியோர் சங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக, முதியோர் சங்க ஆண்டு விழாவில் நெட்டிலிப்பாய் கோயில் வீதி, கோண்டாவில் பகுதிகளைச் சேர்ந்த மூத்தோர்களை கௌரவிப்பதற்காக 25 ஆயிரம் ரூபா நிதி நிர்வாகத்தினரிடம் வழங்கப் பட்டது.

துன்னாலை தெற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் கோரிக்கைக்கு அமைவாக வாகனத் தரிப்பிடம் ஒன்றை அமைப்பதற்கான நிதிச் செலவாக ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பாடசாலை நிர்வாகத்திடமும் கையளிக்கப்பட்டது.

அத்துடன் வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலையின் கோரிக்கைக்கு அமைவாக, 56 ஆயிரம் ரூபா பெறுமதியான பல்வைத்திய சிகிச்சைப் பிரிவுக்கான உபகரணங்கள் வைத்திய சாலை நிர்வாகத்திடம் கையளிக்கப் பட்டன.

இந்த உதவித் திட்டத்தை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் வழங்கினார்.








# கல்முனை கார்மேல் பற்றிமாவில் நடைபெற்ற தைப்பொங்கல் விழா

( வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கில் புகழ்பூத்த கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியின் தைப்பொங்கல் விழா மிகவும் பிரமாண்டமான முறையில் கல்லூரி அதிபர் அருட்சகோதரர் எஸ்.ஈ. றெஜினோல்ட் தலைமையில் இடம்பெற்றது.

முன்னதாக மாட்டு வண்டிலில் பொங்கலுக்கு உரிய பொருள்கள் அனைத்தும் பற்றிமா பெண்கள் பிரிவிலிருந்து ஊர்வலமாக வாழை, தோரணங்களோடு ஆண்கள் பிரிவுக்கு கொண்டுவரப்பட்டது.

அங்கு புதுப்பானையில் புத்தரிசி கொண்டு பொங்கல் இடம் பெற்றது. பாடசாலை அதிபருக்குத் தலைப்பாகை கட்டி அங்கு பொங்கல் பானைக்கு பால் ஊற்றினார்கள்.

பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் சிவ.ஜெகராஜன் கலந்து கொண்டார்.

காரைதீவு உதவி பிரதேச செயலாளர் எஸ்.பார்த்தீபன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

மாணவர்களின் கண்கவர் கலை நிகழ்ச்சிகளும் மேடையேறின.

அங்கு அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் சிவ.ஜெகராஜன கருத்துரைக்கையில்,

தமிழரின் பண்பாடு பாரம்பரியம் அடையாளம் போன்றவற்றை அடுத்த சந்ததிக்குக் கடத்த வேண்டிய பொறுப்பு அவர்கள் சார்ந்த பாடசாலைகளுக்கும் உள்ளது .

இன்று தமிழர்களின் உடை என்ன? அவர்களின் பாரம்பரியம் என்ன? என்பது தெரியாமல் பலர் இருக்கின்றார்கள். அதேபோன்று தைப்பொங்கலின் முக்கியத்துவம் என்ன? அதன் பாரம்பரியம் என்ன? என்பது தொடர்பாக எதிர்கால சந்ததிக்கு அதனை முறைப்படி வழங்க வேண்டும். அதில் கணிசமான பங்கு பாடசாலைகளுக்கும் உண்டு. அதனை பற்றிமா தேசிய கல்லூரி சிறப்பாக செய்கிறது.-என்றார்.








# டெங்கு நுளம்பு பரவலைக் கட்டுப்படுத்த காரைதீவு சுகாதாரப் பிரிவினர் களத்தில்

(நூருல் ஹுதா உமர்)

டெங்கு நுளம்பை கட்டுப்படுத்திப் பிரதேச மக்களை ஆபத்திலிருந்து மீட்க கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி சகிலா இஸ்ஸதீனின் வழிகாட்டலுக்கு அமைய காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா வசீர் தலைமையில் கொள் கலன் சேகரிப்பு நிகழ்வு காரைதீவு மாவடிப்பள்ளி பிரதேசத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர், பொது சுகாதார பரிசோதகர்கள், நுளம்பு கள தடுப்பு பிரிவினர்கள், சுற்றாடல் கழக மாணவர்கள், பிரதேச சபை ஊழியர்கள் நுளம்பு பெருகும் இடங்களை பரிசோதனை செய்தனர். நுளம்பு பெருகும் பொருள்களைப் பிரதேச சபை ஊழியர்களின் உதவியுடன் அகற்ற நடவடிக்கை எடுத்தனர்.





# பாடசாலை மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கி வைப்பு

**(பாறுக் ஷிஹான்)**

கல்முனை அபிவிருத்திக்கும் முகா மைத்துவத்துக்குமான சபையின் ஏற்பாட்டில் நேற்று சனிக்கிழமை (01) வசதி குறைந்த 80 பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலைக்கான பாதணிகள் வழங்கி வைக்கப்பட்டன.

கல்முனை மையோன் மாவத்தையில் அமைந்துள்ள மையோன் ப்ளாஷா திருமண மண்டபத்தில் கல்முனை அபிவிருத்திக்கும் முகாமைத்துவத்துக் குமான சபையின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி யு.எம். நிசார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்முனை பிரதேச செயலாளர் ரி.எம்.எம். அன்சார் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

அத்துடன் அமைப்பின் செயலாளர் ஏ.எல்.ஏ.மஜீட் , உப தலைவர் மௌலவி இசட்.எம். நதிர், பொருளாளர் எம்.ரி.எம். நயீம், கணக்காய்வாளர் ஏ.எம்.எம். முஸ்தக்கீம், உதவிச் செயலாளர் எஸ். எம். ஹாஜா ஆகியோர் உள்ளிட்ட அமைப்பின் உயர்பீட உறுப்பினர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் என பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# கல்முனை மாநகர சபையின் ‘கிளீன் ஸ்ரீலங்கா’ வேலைத்திட்டம்







**(நூருல் ஹுதா உமர்)**

“கிளீன் ஸ்ரீலங்கா” வேலைத்திட்டத்தின் கீழ் கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் திண்மக் கழிவுகளை பூரணமாக அகற்றுதல் மற்றும் கடற்கரை பிரதேசத்தை சுத்தம் செய்யும் வேலைத் திட்டம் கல்முனை மாநகர சபை ஆணையாளர் ஏ.ரீ.எம். றாபி தலைமையில் (01) சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த வேலைத்திட்டம் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவா வின் பங்குபற்றலுடன் ஆரம்பமானது. இதன் முதல் கட்டமாக சாய்ந்தமருதில் இந்த வேலைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டு திண்மக் கழிவுகளை பூரணமாக அகற்றப்பட்டன. கடற்கரை பிரதேசமும் சுத்தம் செய்யப்பட்டது.

இந்த வேலைத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவா, உதவி ஆணையாளர் ஏ.எம்.அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே. எம்.ஜௌசி உள்ளிட்ட மாநகர சபையின் சகல உத்தியோகத்தர்களுக்கும் பொது மக்களுக்கும் மாநகர ஆணையாளர் ஏ.ரீ.எம். றாபி இதன் போது நன்றிகளை தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட ஏனைய பிரதேசங்களிலும் இந்த வேலைத் திட்டம் தொடராக முன்னெடுக்கப்படும் என்று மாநகர ஆணையாளர் ஏ.ரீ.எம். றாபி மேலும் தெரிவித்தார்.




# செட்டிபாளையம் சிவன் மகா கும்பாபிஷேகம்!

(வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு செட்டிபாளையம் சிவன் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 05 ஆம் திகதி புதன்கிழமை கர்மாரம்பத்துடன் ஆரம்பமாகிறது.

எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவம் எதிர்வரும் 7 ஆம் 8 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து மகா கும்பாபிஷேகம் மறுநாள் 09 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கும்பாபிஷேக பிரதம குரு சிவஸ்ரீ மு.கு.சச்சிதானந்தமூர்த்தி குருக்கள் முன்னிலையில் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ க.ஜனார்த்தனன் சர்மா தலைமையில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து மண்டலாபிஷேக பூஜைகள் நடைபெற்று 20 ஆம் திகதி 1008 சங்காபிஷேகத்துடன் நிறைவடையும் என்று ஆலய பரிபாலன சபையின் செயலாளர் ம.புவிதரன் தெரிவித்தார்.

# விவசாயிகளின் ஆதரவோடு ஆட்சிக்கு வந்த அரசு நெல்லுக்கு நிலையான விலை வழங்கத் தவறியது!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு





எதிர்கட்சியில் இருந்து கொண்டு விவசாயிகளுக்காக குரல் எழுப்பி, நெல்லுக்கான நிர்ணய விலையை தீர்மானிப்போம், அதனை சட்டமாக்குவோம் என்று பிரஸ்தாபித்தனர். ஆனால் இன்று அமைச்சர் பதவிகளை வகித்துக் கொண்டு உர மானியமாக 25 ஆயிரம் ரூபாவைக் கூட உரிய நேரத்தில் வழங்க முடியாது உள்ளனர்.

ஒரு சாராருக்கு 15 ஆயிரம் ரூபா என்றும் மற்றுமொரு சாராருக்கு 10 ஆயிரம் ரூபா என்றும் வழங்கப்பட்டுள்ளதே தவிர 25 ஆயிரம் ரூபா இன்னும் மொத்தமாக போய் சேரவில்லை.

விவசாயிகளின் ஆதரவோடு ஆட்சிக்கு வந்த அரசு நெல்லுக்கான நிலையான விலையை வழங்கத் தவறிவிட்டது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

குருநாகல், ஹிரியால தேர்தல் தொகுதியில் கும்புக்கடே பிரதேசத்தில் அமைந்துள்ள கசாகல புராண ரஜமஹா விகாரையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பில் நேற்றைய (01) தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

நாடு வங்குரோத்து நிலையை எட்டியதோடு நாட்டின் பெரும்பாலான மக்களின் ஜீவனோபாயம் வீழ்ச்சி கண்டது. பலர் வறுமை நிலையை அடைந்தனர். இன்றும் நம் நாட்டில் வறுமையை ஒழிப்பதற்கான தெளிவான திட்டமொன்று இல்லை. தற்போதைய அரசும் ஆட்சிக்கு வந்த பிறகு முறையான திட்டத்தை செயற்படுத்தாது, தற்காலிக நிவாரணங்களை வழங்கி வருகிறது. எனவே குறிப்பிட்ட காலத்துக்குள் இந்த ஏழ்மையை போக்குவதற்கான இலக்குடனான திட்டம் வகுக்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற சேவைகள் இன்றும் கூட நடந்த பாடில்லை. எனவே நடக்கப்போகும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மிகவும் முக்கியமானது. கிராமத்தை பாதுகாக்கவும் நகரத்தை பாதுகாக்கவும் மக்கள் நம்பிக்கை வைக்கும் திறமையான வேட்பாளர்களை நாம் களமிறக்குவோம். மக்கள் ஆதரவோடு நாம் வெற்றி பெற வழிவகுப்போம். இதனூடாக பிரச்சினைகளுக்கு முறையான தீர்வுகளை பெற்றுக்கொடுப்போம்.– என்று மேலும் தெரிவித்தார்.






# கிண்ணியா பிரதேச எல்லைக்கு வீதி விளக்குகள் வழங்கி வைப்பு

(முஹம்மட் றிஸ்னாத்)

கிண்ணியா அல்–ஹிக்மா நிறுவனமானது இலங்கை முழுவதும் நீண்ட காலமாக வீதி விளக்குகளை வழங்கும் சேவைகளை செய்து வரும் ஒரு நிறுவனமாகும்.

கிண்ணியா பிரதேச எல்லைக்கு உட்பட்ட பல பிரதேசங்களில் தெரு விளக்குகள் இல்லாமல் மக்கள் பெறும் அசௌகரியங்களை சந்தித்து வருகின்றனர்.

இந்த மக்களின் தேவை கருதி கிண்ணியா நகர சபைச் செயலாளர் குறித்த நிறுவனத்திடம் வேண்டுகோள் விடுத்ததை அடுத்துப் பொது மக்களின் நலன் கருதியும் பாதுகாப்பான தெருக்களை உருவாக்கும் நோக்குடனும் நேற்று சனிக்கிழமை (01) அல்–ஹிக்மா நிறுவனமானது கிண்ணியா நகர சபைக்கு தெரு விளக்குகளை நன்கொடையாக வழங்கியது.

# ஆளுநர் தலைமையில் திருமலையில் 'கிளீன் ஸ்ரீலங்கா' வேலைத்திட்டம்









(ஹஸ்பர் ஏ.எச் )

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர தலைமையில் 'கிளீன் ஸ்ரீலங்கா' என்னும் தொனிப்பொருளில் தூய்மைப்படுத்தும் விஷேட வேலைத் திட்டம் சனிக்கிழமை (01) திருகோணமலை நகரில் இடம் பெற்றது. ஆளுநர் செயலகம் தொடக்கம் கடற்படைத் தளம் வரையுமான கரையோர பிரதேசம் ஆளுநரின் வழிகாட்டலின் கீழ் துப்புரவு செய்யப்பட்டது.

திருகோணமலை நகராட்சிமன்றம் , பட்டனமும் சூழலும் பிரதேச சபை மற்றும் அனைத்து அரச அலுவலக உத்தியோகத்தர்கள் , ஊழியர்களதும் பங்குபற்றுதலில் பெருந்திரளான உத்தியோகத்தர்கள் இதில் கலந்து கொண்டனர்.






# பெண்களுக்கு எதிராக பாலியல், பாலின வன்முறைகளை கையாளும் திறன் பயிற்சி

(ஹஸ்பர் ஏ.எச்.)

பெண்கள், சிறுவர்களுக்கு எதிராக இடம் பெறும் பாலிய வன்முறைச் சம்பவங்களின் போது அதனை அணுகுவதற்கான செயல் முறை நிகழ்வொன்று பொலிஸ் உத்தியோகத்தர்களுக்குக் கந்தளாயில் உள்ள தனியார் விடுதியில் நேற்று (01) இடம்பெற்றது.

இந்த நிகழ்வானது திருகோணமலை மாவட்ட செயலகத்தின் ஒத்துழைப்புடன் திருகோணமலையில் இயங்கி வரும் பெண்களுக்கான சுதந்திர அமைப்பான ஈ – வின்ங் ஏற்பாடு செய்திருந்தது. குறித்த திட்டமானது ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி பங்களிப்பில் ஆசிய பவுண்டேசன் மற்றும் தேவை நாடும் மகளிர் ஆகியன இணைந்து அமுல்படுத்தி வருகிறது.

இதில் திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த கந்தளாய், சேருவில, தம்பலகாமம், மூதூர் ஆகிய பொலிஸ் நிலையங்களில் பெண்கள், சிறுவர் பிரிவில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

பெண்கள் சிறுவர்களுக்கு எதிராக இடம் பெறும் வன்முறைச் சம்பவங்களைப் பாலின அடிப்படையில் எவ்வாறு கையாள்வது மற்றும் பெண்களை வலுப்படுத்தல், அதன் அணுகு முறை தொடர்பிலும் பல விரிவான விளக்கங்கள் இதன்போது வழங்கப்பட்டன. வளவாளராக சிரேஷ்ட சட்டத்தரதி திருமதி உதயனி தெவரப்பெரும கலந்து கொண்டார்.

வன் முறைச் சம்பவங்களை குறைத்து மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான புதிய பொறி முறைகளை இதன் மூலம் எப்படி உருவாக்குவது தொடர்பிலும் பாலின அடிப்படை தொடர்பாக தாங்கள் கையாளும் முறை பற்றியும் குறித்த கலந்துரையாடலில் ஆராயப்பட்டன.

சிவில் சமூகங்களுக்கு புதிய தலைமுறை ஊடாக பெண்களை பாதுகாக்கவும் திறனை கட்டியெழுப்புவதற்கான உபாய முறைகளை பயன்படுத்தி தங்களது பொலிஸ் பிரிவில் திறன்களை கட்டியெழுப்ப தங்களுக்கான வழிமுறைகளை கையாளுதல் தொடர்பிலும் மேலும் இதன்போது விரிவுரைகள் இடம்பெற்றன.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த குறித்த ஈ – வின்ங் பெண்களுக்கான சுதந்திர அமைப்பின் ஸ்தாபகர் திருமதி காயத்திரி நளினகாந்தன்,

பெண்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களைக் கையாளவும் அதனை பொலிஸ் உத்தியோகத்தர்கள் எவ்வாறு பாலின அடிப்படையில் கையாள்வது என்பது தொடர்பிலான திட்டத்தை நாங்கள் நடைமுறைப்படுத்தி வருகிறோம்.

எதிர்காலத்தில் பெண்கள், சிறுவர்கள் பாதிப்படைவதை குறைக்கும் அணுகு முறைகள் தொடர்பிலும் இன்றைய செயலமர்வில் பொலிஸாருக்கு பகிரப்படுகிறது.– என்றார்.

நிகழ்வில் திருகோணமலை மாவட்ட செயலக மாவட்ட பெண்கள் அபிவிருத்தி இணைப்பாளர் திருமதி தீபானி அபேசேகர, பெண்கள் சுதந்திர அமைப்பான ஈவின்ங் தலைவர் திருமதி காயத்திரி நளினகாந்தன், ஆசிய பவுண்டேசனின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் எஸ்.சி.சமிலா பெர்னான்டோ உட்பட பொலிஸ் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

### சட்டவிரோதமாக இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட

# இஞ்சி மூடைகளுடன் நால்வர் கண்டல் குடாவில் சிக்கினர்!

(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாகச் சட்ட விரோதமாக இஞ்சி மூடைகளை கடத்திச் செல்வதாக கற்பிட்டி பொலிஸ் விஷேட புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைய நேற்று சனிக்கிழமை (01) அதிகாலை அவர்கள் கற்பிட்டி பொலிஸாருடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

பள்ளிவாசல்துறைப் பகுதியில் இஞ்சி மூடைகளை கடத்திச் செல்ல உளவு பார்த்துச் சென்றது என்ற சந்தேகத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்றை மறித்து விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது லொறியில் கடத்தி வருகின்றனர் என்று கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து கற்பிட்டி சம்மட்டிவாடி கடற்கரைப் பகுதியிலிருந்து கொழும்புக்குக் கடத்திச் செல்ல முற்பட்டபோது கண்டல்குடா எரிபொருள் நிலையத்துக்கு முன்பாக குறித்த லொறியை மறித்து சோதனையில் ஈடுப்பட்டபோது இஞ்சி மூடைகள் இருந்தமைக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதன்போது 45 பொதிகளில் ஆயிரத்து 839 கிலோ இஞ்சி மீக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் புத்தளம் மற்றும் மதுரங்குளி பகுதிகளைச் சேர்ந்த நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன்



இஞ்சி மூடைகளை ஏற்றிச் சென்ற லொறியையும் உளவு பார்கச் சென்ற மோட்டார் சைக்கிளையும் தடுத்து வைத்துள்ளனர்.

இவ்வாறு மீடகப்பட்ட இஞ்சி மூடைகள் 90 லட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதி என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நால்வரையும் மீட்ட இஞ்சி மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்திய லொறி மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியவற்றுடன் கட்டுநாயக்க சுங்கத்தினரிடம் ஒப்படைத்துள்ளனர் என்று கற்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.





# குடிசார் அமைப்புக்களின் சம்மேளன கலந்தாடலும் திறன்விருத்தி பயிற்சியும்

(த.சுபேசன்)

யாழ். மாவட்ட குடிசார் அமைப்புக்களின் சம்மேளனத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான தொடக்கக் கலந்துரையாடலும் திறன் விருத்திப் பயிற்சிப் பட்டறையும் கிறிசலிஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றிருந்தது.

நிகழ்வின் ஓர் அங்கமாக நிலையான வளர்ச்சி இலக்குகள் மற்றும் பாலின மையப்படுத்தல் குறித்த திறன் விருத்திப் பயிற்சிப் பட்டறை இடம்பெற்றது. இதன் போது வளவாளராக ச.சதீசன் கலந்து கொண்டார்.

அத்துடன் யாழ். மாவட்ட குடிசார் அமைப்புக்களின் சம்மேளனத்துக்கான முகநூல் ஒன்றும் உத்தியோ பூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

முகநூலை கிறிசலிஸ் நிறுவன பிராந்திய திட்ட முகாமையாளர் பிரபாகரன் மற்றும் யாழ். மாவட்ட குடிசார் அமைப்புக்களின் சம்மேளன தலைவி திருமதி தமிழ்ச்செல்வி ஆகியோர் இணைந்து அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர்.

நிகழ்வில் கிறிசலிஸ் நிறுவன பிராந்திய திட்ட முகாமையாளர் பிரபாகரன், கிறிசலிஸ் நிறுவன கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு ஆலோசகர், நிறுவனத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர், யாழ். மாவட்ட குடிசார் அமைப்புக்களின் சம்மேளன பிரதிநிதிகள் மற்றும் உள்ளூராட்சி மன்றப் பெண் பிரதிநிதிகளின் சம்மேளன உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.



# சேருவிலவிலிருந்து தோப்பூருக்கு பஸ்சேவை ஆரம்பித்து வைப்பு!

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்டத்தின் சேருவில தொடக்கம் தோப்பூர், பள்ளிக்குடியிருப்பு,கட்டைபரிச்சான்,மூதூர் வரையான புதிய தனியார் போக்குவரத்து பஸ் சேவை நேற்று (01) வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புத்துறை பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்ராவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண போக்குவரத்து அதிகார சபையின் ஏற்பாட்டில் இந்தப் புதிய சேவை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்ட பிரதி அமைச்சர் புதிய சேவையை தொடங்கி வைத்தார். நிகழ்வில் மாகாண போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் கித்சிறி நவரெட்ணவும் கலந்து கொண்டார்.






# எலிக் காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வு நடைபவனி!

(பாறுக் ஷிஹான்)

எலிக் காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வு நடைபவனி வெள்ளிக்கிழமை மத்திய முகாம் நகரில் இடம்பெற்றது.

இந்த நடை பவனியானது சமுர்த்தி வங்கி அருகில் ஆரம்பித்து மத்திய முகாம் பிரதேச வைத்தியசாலை வரை இடம்பெற்றது. எலிக் காய்ச்சல் தொடர்பிலான விழிப்புணர்வு உரையுடன் நிறைவுற்றது.

இந் நிகழ்வானது நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் நாவிதன்வெளி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் முன்னெடுக்கப்பட்டது.

நாவிதன்வெளி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஐ. எம். முஜீப் உள்ளிட்ட ஊழியர்கள், நாவிதன்வெளி பிரதேச சபை செயலாளர் திரு. பீ. சதீஸ்கரன் உள்ளிட்ட ஊழியர்கள், மத்திய முகாம் பிரதேச வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் இசுரு கொடிகார, நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் அதிகாரிகள், மத்திய முகாம் ஜீ. எம். எம். எஸ். பாடசாலை அதிபர் பிரதி அதிபர், ஆசிரியர்கள் மற்றும் உயர்தர வகுப்பு மாணவர்கள், மத்திய முகாம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள், அன்னமலை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி உள்ளிட்ட அதிகாரிகள், பொதுமக்கள் பங்கு கொண்டனர்.








# இந்த பட்ஜெட்டிலும் தமிழகம் புறக்கணிப்பு

## மத்திய அரசுக்கு விஜய் கண்டனம்

வழக்கம் போல் இந்த ஆண்டும் மத்திய அரசு தமிழகத்துக்குப் புதிய திட்டங்களை அறிவிக்காமலும் போதிய அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யாமலும் புறக்கணித்துள்ளது என்று த.வெ.க. தலைவர் விஜய் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“ 2025-26 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். இந்த நிதிநிலை அறிக்கையில் வரவேற்கத்தக்க அம்சங்கள் ஒரு சில மட்டுமே இடம்பெற்றுள்ளன. ஆண்டுக்கு 12 லட்சம் வரை வருமானம் ஈட்டுவோருக்கு வருமான வரி விலக்கு அளித்திருப்பதை நான் உளமார வரவேற்கிறேன்.

இதன் மூலம் நடுத்தர மக்களுக்குக் குறிப்பிடும்படியான நிவாரணம் கிடைத்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. அதே சமயம் நாட்டில் பெரும்பான்மையாக இருக்கும் ஏழை எளிய மக்களுக்கு நிவாரணம் அளிக்கக் கூடிய பெட்ரோல், டீசல் வரிக் குறைப்பு மற்றும் GST வரிக் குறைப்பை எளிமைப்படுத்துதல் பற்றி எந்த ஓர் அறிவிப்பும் இல்லாதது மிகப் பெரிய ஏமாற்றத்தை அளிக்கிறது.

முதல்முறையாகத் தொழில் முனைவோராக உருவாகும் பெண்கள், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் உள்ளடங்கிய முதல் 5 லட்சம் பேர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு 2 கோடி ரூபா வரை கடன் வழங்கப் புதிய திட்டம் தொடங்கப்படும் என்று அறிவித்திருப்பதைத் தமிழக வெற்றிக் கழகம் உளமார வரவேற்கிறது. அதே சமயம் விலைவாசியைக் கட்டுப்படுத்தவும், வேலை வாய்ப்பை அதிகரிக்கவும் போதிய அறிவிப்புகள் இந்த நிதிநிலை அறிக்கையில் இல்லாதது மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது.

குறிப்பாக, சிறு குறு தொழில் நிறுவனங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வாயிலாக இளைஞர்களுக்குப் புதிய வேலை வாய்ப்பு கிடைக்கும் வகையிலான திட்டங்கள் ஏதும் இந்த நிதிநிலை அறிக்கையில் இடம்பெறவில்லை. புதிய ரயில் தடங்கள், சாலைகள், கோயம்புத்தூர், மதுரை மெட்ரோ ரயில் திட்டங்கள் போன்ற தமிழகத்துக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளுக்கு எந்த ஓர் அறிவிப்பும் இடம்பெறவில்லை.

தமிழகத்தில் மிகத் தொன்மையான இரும்பு நாகரிகம் இருந்தது அண்மையில் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது. இது தமிழகத்துக்கு மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் பெருமை சேர்க்கின்ற கண்டுபிடிப்பாகும். இதற்கு உரிய அங்கீகாரமும் சுற்றியுள்ள பகுதிகளில் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ள நிதியும் வழங்காதது மிகவும் ஏமாற்றம் அளிக்கிறது.

அணுஉலை மின் உற்பத்தி மூலம் தனியார் மயமாக்கப்படுதலுக்கு இந்த நிதிநிலை அறிக்கை முக்கியத்துவம் வழங்கி இருப்பது மிகவும் அதிர்ச்சி அளிக்கிறது. காற்றாலை மற்றும் சூரிய ஒளி மூலம் மின் உற்பத்திக்கான தொழில்நுட்பம் வளர்ந்து வரும் இந்தக் காலக்கட்டத்தில் மீண்டும் சுற்றுச் சூழலுக்கு ஆபத்து விளைவிக்கும் அணுமின் உற்பத்தி தொடர்பான அறிவிப்பை மத்திய அரசு உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும்.

வழக்கம் போல் இந்த ஆண்டும் மத்திய அரசானது தமிழகத்துக்குப் புதிய திட்டங்களை அறிவிக்காமலும் போதிய அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யாமலும் புறக்கணித்துள்ளது. அனைத்து மாநிலங்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியைக் கருத்தில் கொண்டே மத்திய நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்ய வேண்டும். மாறாக, பாரபட்சத்தோடு நடந்து கொள்வது சரியான அணுகுமுறை இல்லை.” என்று குறிப்பிட்டுள்ளார்.



# ஆண்டு வருமானமாக 12 லட்சம் ரூபாவினை பெறுபவர்களுக்கு இந்தியாவில் வரிவிலக்கு

இந்தியாவின் 2025 - 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் ஆண்டு வருமானமாக 12 லட்சம் ரூபாவினை பெறுபவர்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

2025-26 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் நாடாளுமன்றத்தில் நேற்று தாக்கல் செய்த இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், முக்கிய அறிவிப்புகளில் ஒன்றாக இதனை அறிவித்தார்.

அதேநேரம், 12 லட்சம் ரூபாவுக்கு மேல் வருவாய் ஈட்டுபவர்களுக்கு முதல் நான்கு இலட்சம் ரூபாவுக்கு வருமான வரி அறவிடப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டில், இந்த வருமான வரி வரம்பு 7 லட்சம் ரூபா என்ற அளவில் உயர்த்தப்பட்டிருந்தது.

தற்போது, இது அதிகரிக்கப்பட்டுள்ளதன் காரணமாக நடுத்தர வர்க்கத்தினர் வரி செலுத்துவது கணிசமாகக் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, 2026 ஆம் நிதியாண்டில் நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி 6.3 முதல் 6.8 சதவீதம் என்ற அளவில் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், 2047 ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை அடைவதற்கான விதிகள் தொடர்பிலும் இந்த வரவு செலவு திட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



# உக்ரைன் - ரஷ்ய போரில் தாக்குதல் நகர்வு அதிகரிப்பு



தீவிரமடைந்துவரும் உக்ரைன் - ரஷ்ய போரில் இரு தரப்புக்குமிடையே தற்போது தாக்குதல் நகர்வுகள் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி நேற்று உக்ரைன் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில் 5 பேர் உயிரிழந்துள்ளனர். 13 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த தாக்குதலை தொடர்ந்து இடிந்து விழுந்த கட்டடத்திலிருந்து சுமார் 22 பேர் மீட்கப்பட்டனர் என உக்ரைன் தரப்பு கூறியுள்ளது.

இந்த தாக்குதலானது, உக்ரைனின், பொல்டாவா நகரத்தில் உள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் முன்னெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

உக்ரைன் இராணுவமும் பதிலுக்கு ரஷ்யா மீது ட்ரோன் தாக்குதல் நடத்தியதாக கூறியுள்ளது.

இதில் ரஷ்ய வான் பாதுகாப்புப் படையினர் 9 ட்ரோன்களை இடைமறித்து தாக்கி அழித்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.





# மீண்டும் வேகமாகப் பரவும் இபோலா வைரஸ் தொற்று

கிழக்கு ஆப்பிரிக்க நாடான உகாண்டாவில் இபோலா வைரஸ் தொற்று வேகமாகப் பரவி வருவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன்படி இந்த ஆண்டின் இது வரையான காலப்பகுதியில் 40 இற்கும் மேற்பட்டோருக்கு இபோலா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் தொற்றுறுதியானவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதற்கிடையே தலைநகர் கம்பாலாவில் பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதன்மூலம் இந்த ஆண்டு இபோலா தொற்றுக்குப் பலியான முதல் நபர் இவர் ஆவார்.


இதனையடுத்து அங்கு சுகாதார அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

பக்கங்கள் 03
கனடா முரசு
ஞாயிற்றுக்கிழமை 02/02/2025

**காச நோயாளர் எண்ணிக்கை றொறன்ரோவில் உயர்வு**

றொறன்ரோவில் காச நோயாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 2024 ஆம் ஆண்டில் அதிகளவான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

03



# இந்திய வம்சாவளி பெண் கொலை வழக்கு: சந்தேகநபர் மீண்டும் கைது செய்யப்பட்டார்

**கனடாவை உலுக்கிய இந்திய வம்சாவளி இளம்பெண் கொலை வழக்கு ஒன்று கடந்த ஆண்டு தொலைக்காட்சித் தொடராக வெளியானது.**

**இந்நிலையில், அந்த இளம்பெண்ணைக் கொலை செய்த பெண் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில், தற்போது மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார்.**

1997ஆம் ஆண்டு, இந்திய வம்சாவளியினரான ரீனா விர்க் என்னும் இளம்பெண், ஒரு கூட்டம் பதின்ம வயதுப் பெண்கள் மற்றும் ஆண் ஒருவரால் கொல்லப்பட்டார்.

ரீனாவின் தந்தையான ரீனா விர்க் இந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்தவர், தாய் இந்திய கனேடியர்.

தன் தோற்றம் குறித்து சுயபச்சாதாபம் கொண்ட ரீனா, சக மாணவ மாணவிகளால் தொடர்ந்து வம்புக்கிழுக்கப்பட்டார்.

1997ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் திகதி ரீனா மாயமானார். நவம்பர் மாதம் 22 ஆம் திகதி, அவரது உயிரற்ற உடல் கண்டுபிடிக்கப்பட்டது.

ரீனா கொலை தொடர்பில் கெல்லி எல்லார்ட், நிக்கோல் குக், நிக்கோல் பாட்டர்சன், மிஸ்ஸி கிரேஸ், கோர்ட்னி கீத், கெயில் ஊம்ஸ் என்னும் ஆறு பதின்மவயதுப் பெண்களும், வாரன் க்லோவாட்ஸ்கி என்பவரும் கைது செய்யப்பட்டார்கள்.

ரீனாவின் கொலை வழக்கு, Under the Bridge என்னும் பெயரில் கடந்த ஆண்டு தொலைக்காட்சித் தொடராக வெளியானது. இவர்களில் கெல்லி எல்லார்ட், தற்போது கெர்ரி சிம் என்று தன் பெயரை மாற்றிக்கொண்டு வாழ்ந்து வருகிறார். 15 வயதில் கைது செய்யப் பட்ட கெர்ரிக்கு இப்போது 41 வயது ஆகிறது.

கெர்ரி பிணையில் வெளிவந்தபோது ஒருவருடன் பழகியதைத் தொடர்ந்து இரண்டு குழந்தைகளுக்குத் தாயானார்.

பிணையில் விடுவிக்கப்படும்போதே, கொல்லப்பட்ட ரீனாவின் குடும்பத்தினர் இருக்கும் பகுதிக்கு செல்லக்கூடாது, அவர்களை எந்த விதத்திலும் தொடர்பு கொள்ள முயற்சிக்கக்கூடாது என்னும் பல நிபந்தனைகளின் பேரில்தான் கெர்ரி விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில், பிணை நிபந்தனைகளை மீறியதாக, கெர்ரி மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் என்ன நிபந்தனையை மீறினார் என்பதை பொலிஸார் தெரிவிக்கவில்லை.




# நிஜ்ஜார் கொலையை விசாரிக்க ஆணையத்துக்கு அதிகாரமில்லை

## கனடா தூதரகம்

நிஜ்ஜார் கொலை வழக்கை விசாரிக்க அந்த ஆணையத்துக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை என்று டில்லியில் உள்ள கனடா தூதரகம் தெரிவித்துள்ளது.

நிஜ்ஜார் கொலையில் அந்நிய நாட்டுக்கு (இந்தியா) நிச்சயம் தொடர்பிருப்பதை நிரூபிக்க முடியவில்லை என்று கனடா ஆணைய அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட நிலையில், நிஜ்ஜார் கொலை வழக்கை விசாரிக்க அந்த ஆணையத்துக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை என்று டில்லியில் உள்ள கனடா தூதரகம் தெரிவித்துள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டு கனடாவில் உள்ள சர்ரே நகரில் காலிஸ்தான் பிரிவினைவாதி ஹார்தீப் சிங் நிஜ்ஜார் அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரின் கொலையில் இந்திய உளவாளிகளுக்கு தொடர்பிருப்பதாக அந்நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றஞ் சாட்டினார்.

இதைத்தொடர்ந்து நிஜ்ஜார் கொலையில் இந்திய தூதர்களுக்கும் தொடர்பிருப்பதாக கனடா குற்றஞ் சாட்டியது. இந்தக் குற்றச்சாட்டுகளை இந்தியா திட்டவட்டமாக மறுத்தது. இந்த விவகாரத்தால் இருநாடுகளுக்கு இடையிலான உறவில் விரிசல் நிலவி வருகிறது.

இந்நிலையில் கடந்த 2019, 2021-ஆம் ஆண்டுகளில் கனடாவில் நடைபெற்ற தேர்தல்களில் சீனா, ரஷியா உள்ளிட்ட நாடுகளின் தலையீடு இருந்ததாக குற்றச்சாட்டு எழுந்தது.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக விசாரணை மேற்கொண்ட அந்நாட்டு ஆணையத்தின் இறுதி அறிக்கை அண்மையில் வெளியானது. அந்த அறிக்கையில், 'நிஜ்ஜார் கொலையில் அந்நிய நாட்டுக்கு நிச்சயம் தொடர்பிருப்பதை நிரூபிக்க முடியவில்லை' என்று குறிப்பிடப்பட்டது.

இந்தத் தகவல் தொடர்பாக டில்லியில் உள்ள கனடா தூதரகம் கூறுகையில், 'கனடா தேர்தல்களில் அந்நிய நாடுகளின் தலையீடு தொடர்பாக விசாரித்த ஆணையத்துக்கு, நிஜ்ஜார் கொலை வழக்கை விசாரிக்கும் அதிகாரம் வழங்கப்படவில்லை.

இந்த சிக்கலான விவகாரத்தில் நிஜ்ஜார் கொலைக்கு யார் பொறுப்பு என்பதை முடிவு செய்ய வேண்டியது நீதிமன்றங்கள்தான். இந்த விவகாரம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது' என்று தெரிவித்தது.

இதனிடையே அந்த ஆணையத்தின் அறிக்கையில், கனடா தேர்தல்களில் சீனா, இந்தியா, ரஷியா ஆகியவற்றின் தலையீடு இருப்பதாக குற்றஞ்சாட்டப்பட்டது. இதற்கு மறுப்புத் தெரிவித்த மத்திய வெளியுறவு அமைச்சகம், இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் கனடாதான் தொடர்ந்து தலையிட்டு வருவதாக தெரிவித்தது.

# பொருள்களின் விலை அதிகரிக்கும்; கனடாவில் விசேட எதிர்வுகூறல்



கனடாவில்அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் தொடர்பில் விசேட எதிர்வுகூறல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த மாதம் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்பினை மேற்கொள்வதில்லை என அறிவிக்கப்பட்டிருந்த காலம் கடந்த மாதத்துடன் நிறைவடைந்தது.

கடந்த நவம்பர் மாதம் முதல் ஜனவரி மாதம் வரையில் இந்த விலை அதிகரிப்பு கட்டுப்பாடு அமுலில் இருந்தது.

எனினும், தற்பொழுது அத்தியாவசியப் பொருள் விற்பனை நிறுவனங்கள் பொருள்களின் விலைகளை உயர்த்தவுள்ளன என எதிர்பார்க்கப்படுகின்றது.




# கனடாவில் 2 சிறுவர்கள் கொடூரமாக படுகொலை

கனடாவில் 10 மற்றும் 17வயதான இரண்டு சிறுவர்கள் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் ஒருவரை அதிகாரிகள் கைது செய் துள்ளனர்.

தாக்குதலை மேற்கொண்ட நபரும் பலத்த காயங்களுடன் உயிராபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

46 வயதான நபர் ஒருவரே இவ் வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

என்ன காரணத்திற்காக இந்த படுகொலைச் சம்பவம் மேற்கொள் ளப்பட்டது என்பது பற்றிய விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ள னர்.




## காச நோயாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கிட்டத்தட்ட இருபது ஆண்டுகளின் பின்னர் காச நோயாளர் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டில் 375 பேருக்கு காச நோய்த் தொற்று ஏற்பட்டதாக றொறன்ரோ பொதுச் சுகாதார அலு வலகம் தகவல் வெளியிட்டுள்ளது.

காச நோய் ஆபத்தானது எனவும் அதனை தடுக்க முடியும் எனவும் மருத்துவ அதிகாரிகள் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

காச நோயினால் அதிகம் பாதிக் கப்படும் நாடுகளுக்கு பழங்குடியின சமூகத்தினர் செல்வதனால் நோய்த் தொற்று அவ்வாறு தாக்கமுறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

